1979 மார்ச் 19]

ஆ. நாகூர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

* வினா எண். 465—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் பொள்ளாச்சி கல்வி மாவட்டத்துக்கு உட்பட்ட ஆ. நாகூர் மத்திய உயர்நிலைப் பள்ளிக்கு போதிய கட்டிட வசதி இல்லாமல் இருப்பது பற்றி அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) தனியார் நடத்தும் பள்ளியானாலும் 12 வருடங்களாக அனைத்து மாணவர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி அடைந்துள்ள அப்பள்ளிக்கு கட்டிடம், விளையாட்டு மைதானம், மரச்சாமான்கள் வசதிகளையாவது செய்ய அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ); இல்லை. இப்பள்ளியில் 6 பிரிவுகளில் 210 மாணாக்கர்கள் பயிலுகின்றனர். இப்பள்ளிக்கு தற்பொழுது உள்ள இடவசதி போதுமானதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்வதைப்போல அந்தப் பள்ளிக்கு இடவசதி சரியாக இருக்கிறது என்று அவருக்குக் கீழிருந்த அதிகாரிகள் ஏதாவது தகவல் கொடுத்திருந்தால் அது சரியான தகவல் அல்ல என்பதை நான் தாழ்மையோடு சொல்ல ஆசைப்படுகிறேன். அந்தப் பள்ளியை நான் பார்த்தேன். ஒரு மாணவர் கூட பாக்கியில்லாமல் அத்தனைபேரும் 12 வருடங்களாகத் தேர்வு பெற்று வந்திருக்கிறார்கள். அந்தப் பள்ளியை பற்றிக் கவனம் செலுத்தவில்லை என்று அந்தப் பள்ளியின் நிர்வாகிகள் மிகவும் வருந்துகிறார்கள். ஆகவே, இங்கு இடவசதி செய்து கொடுக்கவும் விளையாட்டு—மைதானத்திற்குச் சரியான மைதானம் இல்லை, இடம் தரத் தயார்—அதைச் செய்வதற்குமான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே. இது ஒரு தனியார் பள்ளி. தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்கி அரசு உதவி செய்கிறது. கட்டிடம் கட்ட 35,000 ரூபாயும், விளையாடுமிடம் வாங்குவதற்கு 35,000 ரூபாயும், மற்றும் மாணவர்கள் உபயோகத்திற்கான மரச்சாமான்களுக்காக 5,000 ரூபாயும் அதிகபட்ச மானியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியிடமிருந்து எந்தவகையான மான்யமும் கோரி

நாளதுவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. ஏதும் விண்ணப்பம் இனி பெறப்பட்டால் அது பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனை செய்யப்படும்.

முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி.

* வினா எண். 466—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டிலுள்ள 137 முந்திரி ஆலைகளில் உள்ள 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி அமுல்படுத்துவதில் காலம் கடத்துவது ஏன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாட்டிலுள்ள முந்திரி ஆலைகளுக்கு, வேண்டிய அளவு மூலப்பொருள் (கச்சா முந்திரி) கிடைக்காததால் பெரும்பாலான முந்திரி ஆலைகள் இயங்கவில்லை. இதனால் தொழிலாளர்கள் பலர் வேலையின்றி உள்ளனர். தொழிலின் நலனைக் கருதியும், இப்பொழுது வேலையிலிருந்து வரும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க வேண்டுமென்பதாலும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. தே. ஞானசிகாமணி : தலைவரவர்களே, ஒரு ஆண்டுக்கு இரண்டு மாத வேலைதான் கிடைக்கிறது. அப்படிக் கழிந்த இரண்டு ஆண்டுகளாக, அந்த வேலையில்கூட ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய்தான் சம்பளம் கிடைக்கிறது. பல்வேறு தொழில்கள் ஏற்படுத்தப்படுவதற்கு இந்தத் தொழில் ஏற்படுத்துவதன் காரணத்தால் முதலாளிக்கு அதிக இலாபம் கிடைக்க வசதியாக இருக்கிறது. ஆகவே, கொஞ்ச நாள் வேலை கொடுத்தாலும் கூட அதற்குத் தகுதியான சம்பளம் கிடைக்கும் அளவிலே இந்தத் தொழிலிலே மினிமம் வேஜ் ஏற்படுவதற்கு அமைச்சரவர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டு, முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு தென் மாநிலங்களிலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளின் பிரச்னைகளைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மத்திய தொழிலாளர் நல இலாகா கூட்டுச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. அக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, முந்திரித் தொழில் நல்ல ஏற்றுமதி செய்யக்கூடிய தொழில். இதற்கு மூலப்பொருளான முந்திரிக்கொட்டை கிடைப்பதில் சிரமமாக